மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28-3-1986 அரசு ஆணைப்படி ஆரம்ப சுகாதார நிலைய இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இந்த இடம் மாற்றப்பட்டு இருக்கிறது. இடம் கிடைத்ததற்குப் பிறகு மேற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

அம்பத்தூர் நகரிய துப்புரவுப் பணியாளாகள்.

273—(*வினா எண். 10057) திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் நகரியத்திற்கு துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அம்பத்தூர் நகராட்சிக்கு அரசு அனுமதி அளிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தக்கோரும் கருத்துருவை, அதற்கு தேவைப் படும் விவரங்களுடன் உரிய வழியில் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் அவர்களுக்கு அனுப்பினால் அவர் அதனைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுப்பார்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகரீயத்தைப் போலவே தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பல நகராட்சிகளிலும் துப்புரவு பணியாளர் களின் எண்ணிக்கை குறைவாக இருந்தும், அந்த நகர மன்றங்கள் எல்லாம் அரசுக்கு பணியாளர்களுடைய எண்ணிக்கையை அதிகப் படுத்தவேண்டும் என்று தாக்கீது அனுப்பியும், இதுவரை அரசிடமிருந்து அவர்களுக்கு அனுமதி கிடைக்காத காரணத்தால் துப்புரவு பணியாளர்கள் குறைவாக இருந்து கொண்டு இருக் கிறார்கள். ஆகவே இதற்கு விரைவான நடவடிக்கை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவு பணியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பது தெரியும். ஆனால் அந்த நகராட்சி களுடைய நிதிநிலைமைகளை ஆலோசித்து தான் விரிவுபடுத்த முடியுமே தவிர, மேலும் விரிவுபடுத்திவிட்டால் சம்பளம் கொடுப்பதற்கு பணம் இல்லாமல் போய்விடும்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, துப்புரவுத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்பது அநேகமாக எல்லா நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும்இருக்கிறது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும் போது சொன்னார்கள். அங்கே இருக்கிற அதிகாரிகள் எவ்வளவு தேவை என்பதைப் பற்றி எல்லாம் கணக்கு எடுத்து அறிவித்தால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்று சொன் னார்கள். அடுத்து அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு பணம் இருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும்என்று சொன்னார்கள். ஆக இந்த இரண்டும் ஒழுங்காக இல்லை என்றால் அங்கே துப்புரவு

சுகாதாரம் நாசம் ஆகிவிட்டது என்று அர்த்தம். கோவை நகரம் மாநகராட்சியாக ஆன பிறகு கூட அந்த துப்புரவுப் பணியாளர்களுடைய எண்ணிக்கை அதிகப்படுத்தப்படவில்லை. பல ஆயிரக்கணக்கான துப்புரவுத் தொழிலாளர்கள் அங்கே தேவை. 4,5 ஆயிரம் பேர் தேவை என்று நினைக்கிறேன். எவ்வளவு பேர் என்று தெரியவில்லை.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் கேட்டு இருக்கிற இந்த அம்பத்தூர் நகரீயம், அது நகரீயமாக ஆனதற்கு பிறகு இதுவரையில் எவ்வளவு பேர்களை அதிகப்படுத்தியிருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூரில் தற்போது 184 துப்புரவுத் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அம்பத்தூர் நகரீயத்தைப் பொறுத்தவரையில் 267 தொழிலாளர்களைத் தோற்றுவிக்க நகராட்சியிலிருந்து கருத்துரு வந்தது. ஆனால் முழுவதுமாக தோற்றுவிப்பதற்கு ரூ. 18 இலட்சம் செலவாகும். தற்சமயம் அந்த நகராட்சியிடம் ரூ. 18 இலட்சம் கொடுப்பதற்கு வசதியிருக்கிறது என்றாலும், எதிர்காலத்திலே பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதைக் கருத்தில்கொண்டு, மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று அந்த நகராட்சி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கதர், கிராமத் தொழில் வாரியம் மூலம் செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கிய கடைகள்.

280 (*வினா எண். 11004) திரு. கே. உச்சி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர், கிராமத் தொழில் வாரியம் மூலம் 1985-ம் ஆண்டு, செருப்பு தைக்கும் தொழிலாளர்கள் எவ்வளவு பேருக்கு புதிய கடைகள் வழங்கப்பட்டன?

(ஆ) நடப்பு ஆண்டில் (1986) எத்தனை தொழிலாளர்களுக்கு புதிய கடைகள் அமைத்துக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) 1985 ஆம் ஆண்டில் காலணிப் பணிக்கூடங்கள் வழங்கப்படவில்லை.

(ஆ) 1986 இல் 750 காலணித் தொழிலாளர்களுக்கு காலணி பணிக்கூடங்கள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.